பாபரி மசூதி தகர்க்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துவிட்டன

# நீதியைக் கோருவதற்கு ஒன்றுபடுவோம்! மக்கள் அதிகாரம் மட்டுமே வகுப்புவாத வன்முறைக்கு முடிவு கட்டும்!

பாபரி மசூதி தகர்க்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துவிட்டதை இந்த டிசம்பர் 6 குறிக்கிறது. அன்று குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்றும், நீதி வழங்க வேண்டுமென்றும் கோரி பெரும் எண்ணிக்கையில் மக்கள் பல்வேறு நகரங்களின் வீதிகளுக்கு வருவார்கள். 25 ஆண்டுகளுக்கு முன்னர் இதே நாளில் பல அரசியல்வாதிகள் முன்னின்று வழி நடத்திய ஒரு கூட்டம் அந்த நினைவுச் சின்னத்தைத் தாக்கித் தரைமட்டமாக்கினர். ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் முகலாய அரசர் பாபர், அதே இடத்தில் இருந்த இராமர் கோயிலைத் தகர்த்ததாகவும், இது பதிலுக்கு இந்துக்களுடைய பழிவாங்கும் நடவடிக்கையென்றும் கூறி அது நியாயப்படுத்தப்பட்டது.

பாபரி மசூதி உடைத்து தகர்க்கப்பட்டது அதிகாரத்தில் இருந்தவர்கள் கூறுவது போல, கோபம் கொண்ட ஒரு கூட்டத்தினுடைய செயலல்ல. அது ஒரு திட்டமிட்ட சதிச்செயலாகும். அதற்கு உத்திரப் பிரதேசத்தில் இருந்த பாஜக அரசாங்கமும், மத்தியில் இருந்த காங்கிரசு தலைமையிலான அரசாங்கமும் கூட்டாக பொறுப்பாளிகளாவர். பாபரி மசூதி தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து மும்பை, சூரத் மற்றும் பிற நகரங்களில் பெரிய அளவில் வகுப்புவாத வன்முறை நடைபெற்றது. ஆயிரக் கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். வன்முறையை ஆய்வு செய்வதற்காக அமைக்கப்பட்ட சிரிகிருஷ்ணா குழு, வகுப்புவாத கொலைகளை திட்டமிட்டு நடத்துவதில் பாஜக, சிவசேனா மற்றும் காங்கிரசு கட்சிகள் பங்கேற்றதைச் சுட்டிக் காட்டியுள்ளது. பாபரி மசூதி தகர்ப்பு குறித்து விசாரணை நடத்துவதற்காக அமைக்கப்பட்ட லிபெரான் குழு 17 ஆண்டுகளுக்குப் பின்னர் தன்னுடைய அறிக்கையைக் கொடுத்தது. அது பாஜக மற்றும் காங்கிரசு கட்சிகளுடைய தலைவர்களைக் குற்றவாளிகளாக அறிவித்தது. பாபரி மசூதி தகர்க்கப்பட்டு 25 ஆண்டுகள் கழிந்த பின்னரும் நீதி மக்களுக்கு மறுக்கப்பட்டு வருகிறது. ஒரு வரலாற்று நினைவுச் சின்னத்தைத் தகர்த்தற்கும், ஆயிரக் கணக்கான இந்தியர்கள் கொல்லப்பட்ட வகுப்புவாத வன்முறையைத் தூண்டி விட்டதற்கும் காரணமான குற்றவாளிகளைத் தண்டிக்க எந்த அரசாங்கமும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பாபரி மசூதி இருந்த இடம் யாருக்குச் சொந்தமானது என்பதைத் தீர்மானிக்க அடுத்த அமர்வை டிசம்பர் 5 அன்று உச்ச நீதி மன்றம் துவக்க இருக்கிறது. குற்றவாளிகளைத் தண்டிப்பதையும், நீதி வழங்குவதையும் ஆய்வுக்கு உச்ச நீதி மன்றம் எடுத்துக் கொள்ளாது. ஒரு தேசிய நினைவுச் சின்னத்தின் தகர்ப்பையும், ஆயிரக் கணக்கான மக்களுடைய உயிரிழப்பையும் நம்மால் எப்படி ஒதுக்கி வைத்துவிட்டு அதை ஒரு நிலப் பிரச்சனையாகக் கருத முடியும்? குற்றவாளிகளைத் தண்டிக்காமல் நீதி கிடைக்காது!

அரசியல், வகுப்புவாதமாகவும் குற்றவியலாகவும் ஆக்கப்படுவதோடு, அரசு பயங்கரவாதம் ஒரு புதிய உச்சத்தை அடைந்திருக்கிறது என்ற உண்மையை பாபரி மசூதி தகர்ப்பு வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறது. வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கும், அவர்களுக்கு நிதியளிக்கும் பெரும் நிறுவனக் குடும்பங்களுடைய நலன்களுக்கு சேவை செய்வதற்கும் ஆளும் மற்றும் முக்கிய எதிர்க் கட்சிகள் கொலைகாரத்தனமான குற்றங்களைச் சுதந்திரமாக செய்யமுடியும் என்ற உறைய வைக்கும் உண்மையை அது வெளிப்படுத்தியிருக்கிறது. பிரதிநிதித்துவ சனநாயகமானது மக்களால், மக்களே மக்களுக்காக நடத்தப்படும் ஒரு ஆட்சியியல்ல என்பதை அது காட்டியிருக்கிறது. மாறாக, தற்போதைய அரசியல் வழிமுறையில் மக்கள் முழுவதுமாக ஓரங்கட்டப்பட்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவர்கள் அல்ல. அவர்கள் போட்டியிடுவதற்கு வாய்ப்பு கொடுத்த கட்சிகளுக்கே பொறுப்புடையவர்கள் ஆவர். தாங்கள் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளும் அரசு அதிகாரிகளும் மக்களுக்கு எதிராக மிகவும் கொடூரமான குற்றங்களை இழைத்தாலும் கூட அவர்களைத் தண்டிப்பதற்கு மக்களுக்கு எந்தவித வழிமுறையும் இல்லை.

மக்கள் அதிகாரமற்றவர்களாக இருக்கிறார்கள் என்பதை இது வெட்ட வெளிச்சமாக்குகிறது. இந்திய அரசியல் சட்டம் அறிவித்திருப்பதற்கு மாறாக, இறையாண்மை எனப்படும் உயர்மட்ட முடிவுகளை எடுக்கும் அதிகாரம் மக்கள் கைகளில் இல்லை. உண்மையான அதிகாரமானது அரசியல் செயலாட்சியின் அதாவது உயர்மட்ட அமைச்சர் குழுவின் கைகளில் இருக்கிறது. இந்த செயலாட்சிக்கு நிறுவனக் குடும்பங்களுடைய நலன்களுக்காக கொள்கைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தவும், மக்களுக்கு எதிரான சட்டங்களைப் பிரகடனம் செய்வதற்கும் அளவற்ற அதிகாரம் இருக்கிறது. மக்களவையில் பெரும்பான்மையான தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் ஆதரவைப் பெற்றுள்ள ஒரு கட்சி அல்லது கூட்டணியாக அது இருக்கிறது. பாராளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே கூட இந்த செயலாட்சி முடிவுகளை எடுக்க முடியும். இவ்வாறு அவர்கள் பாராளுமன்றத்தை ஒரு திண்ணைப் பேச்சுக் கூடமாக ஆக்கி வைத்திருக்கிறார்கள். செயலாட்சிக்கும், சட்டமன்றத்திற்கும் முரண்பாடுகள் இருக்கும் போது சரிசெய்ய வேண்டிய சட்டத்துறை தேர்ந்தெடுக்கப்பட்டதல்ல. அதை செயலாட்சித்துறை நியமிக்கிறது. செயலாட்சித்துறையின் விருப்பத்தோடு நீதி மன்றங்கள் இணங்கிப் போகின்றன.

டிசம்பர் 1992 இல் நடைபெற்ற நிகழ்வுகள் நம் கண்களைத் திறந்திருக்கின்றன. இந்திய அரசியலுக்கு அது முக்கியமானதாக இருந்திருக்கிறது. அது ஏப்ரல் 1993 இல் மக்கள் அதிகாரத்திற்கான ஒரு தயாரிப்புக் குழுவை உருவாக்குவதற்கு விழிப்புணர்வு கொண்ட பல்வேறு பெண்கள் மற்றும் ஆண்களை ஒன்றாகக் கொண்டு வந்திருக்கிறது. இக்குழுவின் வேலையானது, இறையாண்மையை மக்களுடைய கைகளில் சேர்ப்பதை இலக்காகக் கொண்ட ஒரு அரசியல் பொதுமக்கள் அமைப்பாக மக்களாட்சி இயக்கத்தை (Lok Raj Sangathan) 1999 இல் உருவாக்குவதற்கான நிலைமைகளைத் தயாரித்தது.

நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், மக்களதிகாரத்திற்காகவும், வகுப்புவாத வன்முறைக்கும் மக்களுடைய உரிமைகள் எந்த வடிவிலும் மீறப்படுவதற்கு முடிவு கட்டுவதற்காகவும் போராட்டத்தைத் தொடர வேண்டுமென்பதில் மக்களாட்சி இயக்கம் உறுதியாக நிற்கிறது.

தற்போதுள்ள அரசியல் வழிமுறை முழுவதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டும். அது மக்களை மையமாகக் கொண்டதாக மாற்றப்பட வேண்டும். நாட்டை நடத்துவதில் மக்கள் ஒரு முக்கிய பங்கு வகிப்பதிலிருந்து அவர்களைத் தடுத்து அதிகாரத்திற்கு வாயில் காவலர்களாக தற்போது, ஆளும் நிறுவனத்தினுடைய அரசியல் கட்சிகள் செயல்பட்டு வருகிறார்கள். இதற்கு நாம் முடிவு கட்ட வேண்டும். மக்களுக்கும், அவர்களுடைய பிரதிநிதிகளுக்கும் அரசியல் கட்சிகளுடைய பங்கிற்கும் இடையிலுள்ள உறவு மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தேர்தலிலுக்கான வேட்பாளர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும், நிறுவனங்களின் பணபலத்தை பின்னணியாகக் கொண்ட கட்சிகளால் அல்ல. மக்களுடைய எல்லா மக்கள் திரள் அமைப்புக்களும் வேட்பாளர்களை நியமிக்க முடிய வேண்டும். இவ்வாறு நியமிக்கப்பட்ட வேட்பாளர்களிலிருந்து இறுதி வேட்பாளர் பட்டியலைத் தேர்தல் தொகுதியில் உள்ள வாக்காளர்களால் தேர்வு செய்யும் வழிமுறை வேண்டும். மக்கள் தங்களுடைய எல்லா அதிகாரத்தையும் அவர்களுடைய பிரதிநிதிகளுக்குக் கொடுத்துவிடக் கூடாது. மக்களுடைய நலன்களுக்காகச் செயல்படாத பிரதிநிதிகளைத் திருப்பியழைக்கும் உரிமை மக்களுக்கு இருக்க வேண்டும். சட்ட வரைவுகளை முன்வைக்கும் உரிமையும் மக்களுக்கு இருக்க வேண்டும்.

கடந்த 25 ஆண்டுகளாக பல்வேறு அரசியல் கட்சிகள், மனித உரிமை மற்றும் குடியுரிமை அமைப்புக்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள், தொழிலாளர் மற்றும் பெண்கள் அமைப்புக்கள், வழக்குறைஞர்கள், நீதிபதிகள், கல்வியாளர்கள், ஓய்வு பெற்ற அரசு ஊழியர்கள் மற்றும் பிற முற்போக்கான தனிநபர்களிடையே அரசியல் ஒற்றுமையைக் கட்டும் நமது முயற்சிக்கு குறிப்பிடத்தக்க வெற்றி கிடைத்திருக்கிறது.

அரசியல் வழிமுறையில் மக்கள் ஓரங்கட்டப்படுவதற்கு முடிவு கட்ட வேண்டுமென மீண்டும் மீண்டும் கோரி கடந்த ஆண்டுகளில் பல அமைப்புக்களும், செயற்பாட்டாளர்களும் ஒன்று கூடி வந்திருக்கின்றனர். “ஒருவர் மீது தாக்குதல், அனைவர் மீதும் தாக்குதல்” என்ற அடிப்படையில் பல்வேறுபட்ட மக்கள் பிரிவினரிடையே ஒற்றுமையை வலுப்படுத்த மக்களாட்சி இயக்கம் வேலை செய்து வந்திருக்கிறது. குற்றவாளிகளுக்குக் கடுமையான தண்டனை கொடுக்கப்பட வேண்டுமென்றும், சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டம் மற்றும் ஆயுதப்படைகள் சிறப்பு அதிகாரச் சட்டம் போன்ற எல்லா கருப்புச் சட்டங்களும் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் நாம் கோரி வந்திருக்கிறோம். சமுதாயத்தின் பிற பிரிவினரை விலையாகக் கொடுத்து பெரும் நிறுவனக் குடும்பங்களின் இலாபத்தை அதிகரிக்கும் நோக்கம் கொண்ட தனியார்மய தாராளமயக் கொள்கைகளைத் திணிப்பதற்காக, வகுப்புவாத வன்முறையும், ஆளும் மற்றும் பெரிய எதிர்க்கட்சிகளுடைய திசை திருப்பலான அரசியலும் பெரும் நிறுவனக் குடும்பங்களுக்கு மிகவும் பிடித்த முறையாகுமென நாம் வெட்ட வெளிச்சமாக்கி வந்திருக்கிறோம்.

நமது மக்கள் வகுப்புவாதிகள் இல்லையென மக்களாட்சி இயக்கம் உறுதியாக நம்புகிறது. அரசு தான் வகுப்புவாதியாக இருக்கிறது. மக்களுடைய மதத்தை அடிப்படையாகக் கொண்டு அவர்களைக் குறிவைத்துத் தாக்கும் போது, தாக்கப்படும் மக்கள் ஒன்று கூடவும், தங்களுடைய சமூகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவும் எல்லா உரிமையும் அவர்களுக்கு உண்டு. வகுப்புவாத வன்முறைக்கு ஆளானவர்கள், மத அடிப்படையில் ஒன்றுபடுவதற்கு அவர்களைக் குற்றம் கூற முடியாது.

பாபரி மசூதி தகர்க்கப்பட்டு 25 ஆண்டுகள் முடிவடைந்த சூழ்நிலையில், நீதி கோருவதற்கு ஆதரவாக எல்லா விழிப்புணர்வு கொண்ட பெண்களும் ஆண்களும் ஒன்றுபட இது ஒரு சந்தர்ப்பமாகும். குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தண்டிப்பதற்கு பதிலாக உச்ச நீதி மன்றம் அழிக்கப்பட்ட நினைவுச் சின்னத்தின் இடம் பற்றிய நிலப் பிரச்சனையின் “இறுதி கட்ட விசாரணையை”த் துவக்க விரும்பும் நிலையில், நாம் இந்தப் பிரச்சனையைக் கைவிட்டுவிடக் கூடாது.

நம்முடைய நகரங்களில் ஆயிரக் கணக்கிலும், இலட்சக் கணக்கிலும் நாம் வீதிகளில் இறங்கி டிசம்பர் 6 பேரணிகளை ஒரு பெரும் வெற்றியாக ஆக்குவோம். மத அடிப்படையில் நம்முடைய ஒற்றுமையை உடைப்பதற்கு ஆட்சியாளர்கள் மேற் கொள்ளும் முயற்சிகளை நாம் முறியடிப்போம்! இந்து - முஸ்லீம் மோதலைத் தூண்டிவிடும் எல்லா முயற்சிகளையும் நாம் முறியடிப்போம்!

நாம் ஒன்றுபட்டு, இறையாண்மையை மக்கள் கைகளில் கொண்டு சேர்க்கும் போராட்டத்தை முன் கொண்டு செல்வோம். வகுப்புவாத வன்முறைக்கும், எல்லா வகையான அரசு பயங்கரவாதத்திற்கும் முடிவு கட்டுவோம்! ஒவ்வொரு மனிதருக்கும் மறுக்க முடியாத தத்தம் மனசாட்சிக்கான உரிமையை நாம் உயர்த்திப் பிடித்து அதைப் பாதுகாப்போம்! நம்முடைய ஒற்றுமை மட்டுமே இந்தியாவைப் பேரழிவிலிருந்து காப்பாற்ற முடியும்!

*குற்றவாளிகளைத் தண்டிப்பீர்!*

*ஒருவர் மீது தாக்குதல், அனைவர் மீதும் தாக்குதல்!*

*வகுப்புவாத வன்முறைக்கு ஒரே தீர்வு - மக்களாட்சி! மக்களாட்சி!*

**மக்களாட்சி இயக்கம்**

www.lokraj.org.in கைபேசி 75980 69667